ஜோலார்பேட்டை நகராட்சி

சாதாரண கூட்டம்

2022–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் தேதி (**29.09.2022**) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்றக் கூடத்தில் நடைபெறும் நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை.

நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று"
(மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்ற உணரத்தக்கதாகும்.)

**பொருள்கள்**

**1) கீழ் குறிப்பிட்ட நகராட்சி அலுவலர்களின் நாட்குறிப்புகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

அ) ஜோலார்பேட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2022ம் மாதத்தின்நாட்குறிப்புகள்.

ஆ) ஜோலார்பேட்டை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2022ம் மாதத்தின்நாட்குறிப்புகள்.

2) ஜோலார்பேட்டை நகராட்சியின் ஆகஸ்ட்–2022 மாதத்திற்கான வரவு செலவு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Service Name | No of Transactions | No of Acknowledgement | No of Receipts | Receipt Amount (Rs) |
|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F |
| **Service Type Name :** Application | | | | | |
| **Service Category Name :** Birth and death | | | | | |
| 1 | Request for Birth Details Correction | 1 | 0 | 1 | 200 |
| 2 | Request for Birth NAC | 1 | 0 | 1 | 100 |
| 3 | Request for Child Name Registration | 1 | 0 | 1 | 200 |
| **Service Category wise Total :** | | **3** | **0** | **3** | **500** |
| **Service Category Name :** Non Tax | | | | | |
| 4 | Property Allotment | 2 | 2 | 0 | 0 |
| **Service Category wise Total :** | | **2** | **2** | **0** | **0** |
| **Service Category Name :** Property Tax | | | | | |
| 5 | Name Transfer of Property | 3 | 3 | 0 | 0 |
| 6 | Vacant Land | 32 | 32 | 0 | 0 |
| **Service Category wise Total :** | | **35** | **35** | **0** | **0** |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Service Category Name :** Receipts | | | | | |
| 7 | Payment of Professional Tax | 28 | 0 | 28 | 84672 |
| 8 | Payment of Property Tax | 341 | 0 | 341 | 376727 |
| 9 | Payment of Water Supply | 50 | 0 | 50 | 49740 |
| 10 | Payment of WS Deposit | 4 | 0 | 4 | 5456 |
| 11 | Rental Collection | 15 | 0 | 15 | 136762 |
| **Service Category wise Total :** | | **438** | **0** | **438** | **653357** |
| **Service Type wise Total :** | | **478** | **37** | **441** | **653857** |
| **Service Type Name :** Receipt | | | | | |
| **Service Category Name :** Miscellaneous Receipts | | | | | |
| 12 | Amma Unavagam | 16 | 0 | 16 | 38135 |
| 13 | Application Charges | 1 | 0 | 1 | 150 |
| 14 | CRS-LATE FEE FOR DEATH REGISTRATION | 3 | 0 | 3 | 900 |
| 15 | Deposit | 18 | 0 | 18 | 63000 |
| 16 | Other Income | 27 | 0 | 27 | 41500 |
| 17 | Renewal Charges | 1 | 0 | 1 | 1700 |
| **Service Category wise Total :** | | **66** | **0** | **66** | **145385** |
| **Service Type wise Total :** | | **66** | **0** | **66** | **145385** |
| **Grand Total :** | | **544** | **37** | **507** | **799242** |
| | | | | **SFC GRANT** | **6780332** |
| **TOTAL** | | | | | **7579574** |

| **Expenditure** | | |
|---|---|---|
| 2101001 | PAY | 1085423 |
| 2101004 | DEARNESS ALLOWANCE | 336481 |
| 2101005 | HOUSE RENT ALLOWANCE | 53129 |
| 2101007 | MEDICAL ALLOWANCE | 11584 |
| 2101008 | OTHER ALLOWANCE | 2500 |
| 2102019 | CONVEYANCE ALLOWANCE | 1800 |
| 2102020 | WASHING ALLOWANCE | 4723 |
| 2201201 | TELEPHONE CHARGES | 17696 |
| 2204001 | VEHICLE INSURANCE | 147205 |
| 2205104 | LEGAL & ARBITRATION EXPENSES | 15000 |
| 2206001 | ADVERTISEMENT CHARGES | 50882 |
| 2208003 | OTHER EXPENESE | 37575 |

| | | |
|---|---|---|
| 2208004 | SITTING FEES/ HONORARIUM FOR THE COUNCILLORS AND MEETING EXPENSES | 10800 |
| 2303001 | PETROL | 4116 |
| 2303002 | DIESEL | 137080 |
| 2303003 | OIL / LUBRICANTS | 19937 |
| 2305007 | MAINTENANCE EXPENSES FOR STREET LIGHTS | 214321 |
| 2305301 | Light Vehicles - Maintenance | 434208 |
| 2308009 | GARBAGE CLEARANCE | 1284088 |
| 2308019 | AMMA UNAVAGAM | 264620 |
| 2308021 | Anti Filaria / Anti Malaria Operations | 266400 |
| | **Total** | **4399568** |

ஆகஸ்ட் மாத மொத்த வரவு – ரூ. 75,79,574/–

ஆகஸ்ட் மாத மொத்த செலவு – ரூ. 43,99,568/–

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்

**3)** ஜோலார்பேட்டை நகராட்சியில் ஆகஸ்ட் 2022ஆம் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு 0 மற்றும் இறப்பு 17 ஆகும்

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**4)** ஜோலார்பேட்டை நகராட்சியின் அம்மா உணவகம், நகராட்சி அலுவலகம் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் குடியிருப்பில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் RO Plant பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட இடங்களில் உள்ள RO Plantகளை பழுதுநீக்கி பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு ஆகும் தோராய செலவின தொகை ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதி 2022–2023ல் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.3467 /2022/இ1</u>

**5)** மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிக்குட்பட்ட ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி பாகம் எண்.94 முதல் 117 வரை மற்றும் 123, 124 ஆகிய பாகங்களில் உள்ள வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி மேற்கொள்ள பொதுமக்களிடம் நோட்டீஸ் விநியோகம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.

அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பாகம் எண்.94 முதல் 117 வரை மற்றும் 123, 124 ஆகிய பாகங்களில் உள்ள வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி

குறித்து விழிப்புணர்வு நோட்டீஸ் அச்சடிக்க தோராய செலவினம் ரூ.12,000/– (ரூபாய் பனிரெண்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேற்படி, படிவம் அச்சடித்து வழங்க 11.08.2022 தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி வழங்கியவரின் விவரம் | gâæ‹ étu« |
|---|---|---|
| | | வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் 3000 பிரதிகள் அச்சடிக்க ரூ. |
| 1 | திருமலை பிரிண்டர்ஸ், எம்.எம்.எம்.ரெட்டி தெரு, ஜோலார்பேட்டை | ரூ.13,500/– |
| 2 | மாருதி பிரிண்டர்ஸ், பார்த்தசாரதி தெரு, ஜோலார்பேட்டை | ரூ.11,340/– |
| 3 | திருமகள் பிரிண்டர்ஸ், முனிசாமி நாயுடு தெரு, ஜோலார்பேட்டை | ரூ.14,400/– |

**அலுவலக குறிப்பு :**

1. மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள வ.எண்.2ன் விலைப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. நகரமன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.157/2021/எப்1

**6)** ஜோலார்பேட்டை நகராட்சியில் தமிழக அரசின் மூலம் கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளை அரசின் சாதனை மலர் 2022ல் வெளியிட தெரிவித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருப்பத்தூர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. மேலும், திருப்பத்தூர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகம் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வருகைக்கான செய்திதாள் விளம்பரம் செய்யப்பட்டு இதற்குண்டான கட்டணம் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | செய்திதாளின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மாலை மலர் நாளிதழ் (சாதனை மலர் 2022)<br>Malar publication Limited | **9,975/–** |
| 2 | தினத்தந்தி நாளிதழ்<br>The Daily Thanthi | **9,525/–** |
| 3 | தினகரன் நாளிதழ்<br>Kal Publications (p) Ltd | **23,520/–** |

வரப்பெற்றுள்ள விளம்பர கட்டணத் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

<u>ந.க.எண்.96 /2016/இ1.</u>

**7)** n#hyh®ng£il efuh£Á¡F£g£l பகுதி சுகாதார துறை அமைச்சர் அவர்கள் muÁd® kfë® nky¦ãiy gs¦ëæy¦ கொரோனா Booster Doss éê¥òz®Î Vw¦பாL bra¦Í« gâfis ஏற்பாடுகள் செய்ய கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 18.08.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மேடை, பந்தல், ஒலி & ஒளி, நாற்காலி, மேசைகள் மற்றும் இதர அலங்காரப் பணிகள் செய்தல். (வாடகை அடிப்படையில்) | Thiru.T.P.Gajendiran &Sons திருப்பத்தூர். | 25,500/ |
| 2 | | Tmt..ABIRAMI SOUND SERVICE, திருப்பத்தூர். G.பாலாஜி , 43, சி கே சி ரோடு (தாலுக் காவல் நிலையம் அருகில்), | 20,000/ |
| 3 | | Tmt.REVATHI AUDIO, thâa«gho. | 23,500/ |

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Tmt.ABIRAMI SOUND SERVICE, திரு. G.பாலாஜி , திருப்பத்தூர் ரூ.20,000/ க்கு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு, மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**8)** அரசாணை(நிலை) எண் 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2) துறை, நாள்: 02.06.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9514/2022/தி.1து.இ.தி நாள்.11.05.2022 தேதிய கடிதத்தில் மாதம்தோறும் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளில் பெருமளவு மக்கள் பங்களிப்புடன் நகரத்தின் தூய்மைக்கான மக்கள் இயக்கத்திற்கு 6 கருப்பொருட்களை கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, ஜோலார்பேட்டை நகாட்சியில் 2022–2023–ஆம் ஆண்டிற்கான நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் (People's Movement of Clean Cites) திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிர தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி, தூய்மைக்கான மக்கள் இயக்கம் (People's Movement of Clean Cites) திட்டத்தின் கீழ் தீவிர தூய்மைப் பணிகள் மேற்கொள்ளும் தூய்மை பணியாளர்களுக்கு 27.08.2022 சனிக்கிழமை

அன்று நற்சான்று வழங்கும் விழாவிற்கு விழா பந்தல், சேர் அமைக்கும் பணிக்கு 26.08.2022 தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி வழங்கியவரின் விவரம் | பணியின் விவரம் நற்சான்றிதழ் வழங்க விழா பந்தல் அமைக்கும் பணி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வனிதா சவுண்ட் சர்வீஸ் & சப்ளையர்ஸ்<br>ஜண்டாகாரன் வட்டம், தாமலேரிமுத்தூர் | ரூ.5900/- |
| 2 | ஸ்ரீ முருகன் சவுண்ட் சிஸ்டம்<br>டெக்கரேசன்& சப்ளையர்ஸ்<br>வாணியம்பாடி மெயின் ரோடு, ஜோலார்பேட்டை | ரூ.5450/- |
| 3 | M.சம்பத் சவுண்ட் சீஸ்டம் & சப்ளையர்ஸ்<br>நெ.8, புதூர் பஸ் நிலையம், ரெட்டியூர் அஞ்சல்<br>ஜோலார்பேட்டை. | ரூ.4800/- |

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள வ.எண்.3ன் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2107/2022/எச்1

**9)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17129/2022/M1 நாள்.30.06.2022 தேதிய கடிதத்தில் 75-வது சுதந்திரதின விழாவினை சிறப்பாக கொண்டாடும் பொருட்டு "சுதந்திரதின அமுத பெருவிழா" 13.08.2022 முதல் 15.08.2022 வரை அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் அவர்களின் நேரடி அறிவுரை நாள்.08.07.2022ன்படி திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, திருப்பத்தூர் அவர்களிடம் ஒரு கொடி ரூ.20/- வீதம் இந்நகராட்சிக்கு 8100 தேசிய கொடிகள் வாங்கப்பட்டது. 8100 தேசிய கொடிகள் இந்நகரில் உள்ள வீடுகள், வணிக நிறுவனங்கள், திருமணமண்டபங்கள், பள்ளிகள், கல்லூரிகள் என அனைத்து கட்டிடங்கள் மீதும் ஏற்ற வேண்டுமென தெரிவித்து விநியோகம் செய்யப்பட்டு 75-வது சுதந்திரதின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மேற்படி 8100 தேசிய கொடிகள் வாங்கியதற்கான தொகை ரூ.162000/- வழங்கக் கோரி திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, திருப்பத்தூர் அவர்களிடமிடருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே, திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, திருப்பத்தூர் அவர்களிடமிருந்து 8100 தேசிய கொடிகள் வாங்கியதற்கான

தொகை ரூ.162000/- (ஒரு இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, திருப்பத்தூர் அவர்களிடமிருந்து 8100 தேசிய கொடிகள் உடன் வாங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்
2. 8100 தேசிய கொடிகள் வாங்கியதற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.162000/-வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2916/2022/எச்1

**10)** ஜோலார்பேட்டை நகராட்சிக்கு வார்டு எண்.15 பகுதி மற்றும் 1 முதல் 18 வார்டுகளில் பருவமழையின் காரணமாக சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை கிராவல் நிரப்பி சமன் செய்யும் பணிகள் மேற்கொள்ள 02.09.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | வாடகை விவரம் | திரு.S.B.குமரவேல், ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை | திருமதி. M.மாலதி ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை | M/S .AM கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை |
|---|---|---|---|---|---|
| 1. | ஜோலார்பேட்டை நகராட்சிக்கு வார்டு எண்.15 பகுதி மற்றும் 1 முதல் 18 வார்டுகளில் பருவமழையின் காரணமாக சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை கிராவல் நிரப்பி சமன் செய்யும் பணி (மதிப்பீடு தொகை ரூ.50,000). | JCB இயந்திரம் ஒரு மணி நேரம் வாடகை அனைத்து செலவினங்கள் | 800.00 | 783.00 | 850.00 |
| | | கிராவல் 1 கனமீட்டர் | 230.00 | 222.00 | 235.00 |

**அலுவலக குறிப்பு**

1. விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதி2022-2023ல் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள திருமதி.M.மாலதி ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டைஅவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 3468 /2022/இ1)

**11)** ஜோலார்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.1 பொட்டிகான்பள்ளம் பகுதியில் உள்ள உரக்கிடங்கில் பையோ மைனிங் (Bio mining) செய்யப்பட்ட இடத்தில் 139 மரங்கள் நடும் பணியினை செய்ய 15வது மத்திய நிதிகுழு மான்யம் **2022-2023** ஆம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் ரூ.0.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.16118/2022/cfc-1 நாள்.26.08.2022ல் அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து. மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**.

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.16118/2022/cfc -1 நாள்.26.08.2022 படி அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ரூ.40,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். மேலும், பணிக்கான செலவினத் தொகையினை 15வது மத்திய நிதிகுழு **2022-2023** ஆம் ஆண்டு நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
3. பணியின் அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.365/2022/இ1

**12)** ஜோலார்பேட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள G.O.101 ன்படி ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள 117 பணியாளர்கள் நிர்ணயம் செய்து மேற்படி எண்ணிக்கையில் 22 நிரந்தர பணியாளர்கள் போக 93 பணியாளர்களை அனுமதித்துள்ளார்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் முதற்கட்டமாக ந.க.எண்.2218/பி3/2013 நாள்.19.03.2013ல் முதன்மை அனுமதியில் 41 பணியாளர்களுக்கும் மற்றும் இரண்டாம் கட்டமாக ந.க.எண்.3115/பி3/2015 நாள்.27.10.2015ன்படி 41 பணியாளர்களுக்கும் மற்றும் மூன்றாம் கட்டமாக கே.டி.எஸ்.எண்.32976/ஜே3/2018 நாள்.05.03.2019ன்படி 11 பணியாளர்கள் ஆக மொத்தம் 93 பணியாளர்களை கொண்டு வார்டு 1 முதல் 18 வரையில் தூய்மை பணிகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21787/2021/EA2ன்படி 59 பணியாளர்கள் மட்டும் Oustsourcing மூலம் தனியாரிடமிருந்து பெற்று பணிகள் மேற்கொள்ள பிரேரேணை அனுப்ப நகரமன்ற தீர்மான எண்.327 நாள்.10.12.2021ல் அனுமதி வழக்கப்பட்டுள்ளது. மேற்படி 59 பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் முதன்மை அனுமதி பெற கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு 10.12.2021ல் பிரேரணை அனுப்பப்பட்டது.

கடந்த பிப்ரவரி 2022 வரை அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ், புதூர், வாணியம்பாடி என்ற நிறுவனத்திற்கு 93 பணியாளர்கள் Outsourcing முறை மூலம் தினசரி வழங்க பணி உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

தற்போது ஏற்னெவே பணி செய்தும் வரும் அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ், புதூர், வாணியம்பாடி என்ற நிறுவனத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.57 நாள்.09.06.2022ன்படி ஜீலை, ஆகஸ்ம் மற்றும் செப்டம்பர் 2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் நாளது வரை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து 59 நபர்களுக்கு முதன்மை அனுமதி வேண்டி அனுப்பப்பட்ட பிரேரணைக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

எனவே, இந்நகராட்சியின் பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் பாதிக்கப்பாமல் இருக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மூலம் 59 பணியாளர்கள் தனியார் மூலம் பெற்று தூய்மை பணிகள் மேற்கொள்ள முதன்மை அனுமதி ஆணை பெறும் வரையில் நகராட்சி நிர்வாக நலன் கருதி ஏற்கெனவே Outsourcing முறை மூலம் 93 தூய்மை பணியாளர்கள் வழங்கி வரும் அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ், புதூர், வாணியம்பாடி என்ற நிறுவனத்திற்கு அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் 2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக நலன் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் முதன்மை ஆணை பெறும் வரையில் ஏற்னெவே பணி செய்து வரும் அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ், புதூர், வாணியம்பாடி என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மூன்று மாத காலத்திற்கு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1881/2022/எச்1

**13)** ஜோலார்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக அமைக்கப்படும் குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் குறித்து அரசாணை எண்.141ல் குறிப்பிட்டுள்ளபடி இனி வரும் காலங்களில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மனைப்பிரிவு தொடர்பாக வரப்பெற்ற அரசாணை எண்.141 நாள்.16.07.2022 (G.O (MS) No.141) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மேற்படி அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.

**14)** மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்களின் ந.க.பே.மே1/10892/2022 நாள்.19.08.2022 கடிதத்தில் ஜோலார்பேட்டை நகராட்சியின் ஆணையாளர் அவர்களுக்கு வாக்கி டாக்கி (POC Walkie Talkies) 1 எண் வழங்கப்பட உள்ளது. இதற்குண்டான தோராய கட்டணம் ரூ.45,000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினம் ரூ.45,000/ஐ நகராட்சி வருவாய் நிதி 2022–2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.3267/2022/இ1

**15)** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு நலதிட்ட உதவிகள் வழங்க வருகை தர உள்ளதால் ஜோலார்பேட்டை நகராட்சிக்கு உட்பட்ட வாணியம்பாடி திருப்பத்தூர் மெயின் ரோட்டில் இருபுறமும் குண்டும் குழியும் ஏற்பட்டுள்ளதை கிராவல் நிரப்பி சமன் செய்யும் பணிகள் மேற்கொள்ள 12.09.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | வாடகை விவரம் | திரு.S.B.குமரவேல், ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை | திருமதி.M.மாலதி ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை | M/S .AM கண்ஸ்டக்சன், ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டை |
|---|---|---|---|---|---|
| 1. | ஜோலார்பேட்டை நகராட்சி பகுதிகளில் சாலைகளில் இருபுறமும் குண்டும் குழியும் உள்ளதை கிராவல் நிரப்பி சமன் செய்தல் (மதிப்பீடு தொகை ரூ.30,000). | JCB இயந்திரம் ஒரு மணி நேரம் வாடகை அனைத்து செலவினங்கள் | 800.00 | 783.00 | 850.00 |
| | | கிரவல் 1 கனமீட்டர் | 230.00 | 222.00 | 235.00 |

**அலுவலக குறிப்பு**

1. நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள திருமதி.M.மாலதி ஒப்பந்ததாரர், ஜோலார்பேட்டைஅவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதி 2022 2023 யிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**16)** ஜோலார்பேட்டை நகராட்சியில் **நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) 2021– 2022ஆம்** ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.27519–51/2021/P2 நாள்.13.09.2022 கீழ்காணும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வரப்பெற்று அனுமதி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண். | பணியின் விவரம் | அனுமதிக்கப் பட்ட மதிப்பீடு தொகை ரூ. | அரசு மான்யம் தொகை ரூ. | பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | இலட்சத்தில் | | |
| 1. | நகராட்சியின் வார்டு எண்.11 ஊசிநாட்டன் வட்டம், கேசவரெட்டி தெரு இணைப்பு பகுதியில் 12மீ உயரம் கொண்ட 6 எண்கள் 150 வாட்ஸ் LED விளக்குடன் கூடிய மினி கோபுர விளக்கு அமைக்கும் பணி செய்தல். | 4.30 | 2.87 | 1.43 |
| 2. | நகராட்சியின் வார்டு எண்.4 நாட்றம்பள்ளி சாலை, பார்சம் பேட்டை இணைப்பு பகுதியில் 12மீ உயரம் கொண்ட 6 எண்கள் 150 வாட்ஸ் LED விளக்குடன் கூடிய மினி கோபுர விளக்கு அமைக்கும் பணி செய்தல். | 4.30 | 2.87 | 1.43 |
| 3. | நகராட்சியின் வார்டு எண்.2 வாணியம்பாடி ரோடு ஆஞ்சநேயர் கோவில் இணைப்பு பகுதியில் 12மீ உயரம் கொண்ட 6 எண்கள் 150 வாட்ஸ் LED விளக்குடன் கூடிய மினி கோபுர விளக்கு அமைக்கும் பணி செய்தல். | 4.30 | 2.87 | 1.43 |
| 4. | நகராட்சியின் வார்டு எண்.6 குடியான குப்பம், திருப்பத்தூர் சாலை இணைப்பு பகுதியில் 12மீ உயரம் கொண்ட 6 எண்கள் 150 வாட்ஸ் LED விளக்குடன் கூடிய மினி கோபுர விளக்கு அமைக்கும் பணி செய்தல். | 4.30 | 2.87 | 1.43 |

**அலுவலக குறிப்பு :**

1. நமக்கு நாமே திட்டம் 2021–2022ஆம் ஆண்டிற்கு பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.27519–51/2021/P2 நாள்.13.09.2022ல் நிர்வாக அனுமதி வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.852/2021/இ1

**17)** ஜோலார்பேட்டை நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளில் உள்ள 1599 தெரு விளக்கு பழுதுபார்த்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தேவையான உதிரிபாகங்கள் வாங்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022––2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**18)** ஜோலார்பேட்டை நகராட்சி, வார்டு எண்.05, பெருமாள் கோயில் தெரு, ஜோலார்பேட்டை கிராம சர்வே எண்.58/2பி1பி, 58/2பி1டி, 58/2பி1–ல் 3.263/4 ஏக்கர் (13223.10ச.மீ) பரப்பளவு

கொண்ட உத்தேச குடியிருப்பு மனைபிரிவு அமைக்கப்பட உள்ளதாக தெரிவித்து திரு.K.திருப்பதி மற்றும் திரு.T.இளையராஜா பெருமாள் கோயில் தெரு, ஜோலார்பேட்டை என்பவர் இணைதளம் மூலம் விண்ணப்பம் செய்துள்ளனர். விண்ணப்ப எண் Online Application No.GW9CGCBR மனு செய்துள்ளனர்.

மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இணை இயக்குநர்/உதவி இயக்குநர் (முகூபொ), நகர் ஊரமைப்புத்துறை, திருப்பத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.GW9CGCBR/2022/TCP நாள்.12.08.2022 தேதி கடிதத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடத்தினை உள்ளாட்சிக்கு தான பத்திரம் மூலம் தானமாக பெறுவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஜோலார்பேட்டை கிராம சர்வே எண்.58/2பி1பி, 58/2பி1டி, 58/2பி1–ல் 3.263/4 ஏக்கர் (13223.10ச.மீ) பரப்பளவு கொண்ட மனையிடத்தின் உத்தேச சாலைகள் (Road Pattern) மற்றும் பொது உபயோக (Public Purpose) இடம் மற்றும் பூங்கா இடம் ஆகியவற்றை ஜோலார்பேட்டை நகராட்சி ஆணையாளர் பெயரில் பதிவு செய்யப்பட்ட பத்திர ஆவண எண்.2712/2022 நாள்.05.09.2022 அன்று வழங்கப்பட்டுள்ள தான பத்திரம் மற்றும் இணை இயக்குநர்/உதவி இயக்குநர் (முகூபொ), நகர் ஊரமைப்புத்துறை, திருப்பத்தூர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற சாலைகள் அமைப்பு (Road Pattern) மன்றத்தின் பதிவிற்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி மனுதாரர் நகராட்சி ஆணையாளர் பெயரில் தானமாக வழங்கப்பட்டுள்ள சாலைகளுக்கான தானப் பத்திரத்தை மன்றம் ஏற்கலாம்.
2. இணை இயக்குநர்/உதவி இயக்குநர் (முகூபொ), நகர் ஊரமைப்புத்துறை, திருப்பத்தூர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள சாலைகள் அமைப்புக்கு (Road Pattern) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.3175/2022/எப்1

**19)** ஜோலார்பேட்டை நகராட்சிக்கு எதிராக திரு.மைவண்ணகுமார் என்பவர் திருப்பத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.52/2022 மற்றும் IA No.1/2022 ஆகியவை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மற்றும் மேற்படி வழக்கிற்கு உண்டா செலவினத்தை மேற்கொள்ள தொகை ரூ.7000/ க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் பதிவு செய்யலாம்
2. மேற்படி வழக்கிற்கான செலவினதை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3330/2022/எப்1

**20)** ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு 1 முதல் 18 வார்டுகளில் மொத்தம் 260 எண்ணிக்கையிலான சிறுமின்விசை பம்புகள் உள்ளன. மேற்காணும் ஆழ்துளை கிணறுகளில் சிறுமின்விசை மோட்டார் பம்புகள் பொருத்துவதற்கு HDPE பைப்கள் மற்றும் உதிரி பொருட்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**21)** ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு எண்.1ல் உள்ள பொட்டிகான் பள்ளம் உரக்கிடங்கில் சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து அகற்றும் பணிக்கு குப்பைகளை அளவிட தேவையான அரசின் தரசான்று ISI முத்திரை பெற்ற எடை இயந்திரம் (Weighing Machine) புதியதாக வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.83,000/ க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**22)** தேசிய சுகாதார இயக்கம், சென்னை (National Health Mission Tamil Nadu) அவர்களின் கடிதம் ந.க.எண்.5814/P10/NHM/2021 நாள்.22.11.2021 தேதிய கடிதத்தில் 15-வது நிதி ஆணையம் சுகாதார மானியங்கள் திட்டம் 2021-2022ன் கீழ் ஜோலார்பேட்டை நகராட்சிக்கு குடியானகுப்பம் பகுதியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அரசு துணை சுகாதார நிலையம் (HSC) அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, 15-வது நிதி ஆணையம் சுகாதார மானியங்கள் திட்டம் 2021-2022ன் கீழ் இந்நகராட்சியில் குடியானகுப்பம் புதியதாக அரசு துணை சுகாதார நிலையம் (HSC) அமைப்பது தொடர்பாக வார்டு எண்.6, குடியானகுப்பம் கிராம சர்வே எண்.241/4ல் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 3 சென்ட் பரப்பளவில் கட்டப்பட உள்ள இடத்தினை மாவட்ட வருவாய் அலுவலர், திருப்பத்தூர் மற்றும் துணை இயக்குநர், நலப்பணிகள், திருப்பத்தூர் அவர்களால் நேராய்வு செய்யப்பட்டு ஒப்புதல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, வார்டு எண்.6, குடியானகுப்பம் கிராம சர்வே எண்.241/4ல் புதியதாக அரசு துணை சுகாதார நிலையம் (HSC) 3 சென்ட் பரப்பளவில் அமைக்க ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகு குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.403/2020/எப்1

**23)** ஜோலார்பேட்டை நகராட்சியின் அத்தியாவசிய பணிகளான குடிநீர் வினியோகம் மற்றும் தெருவிளக்கு பாரமரிப்பு பணியாளர்களை பணிக்கு அமர்த்துவது தொடர்பாக முக்கிய செயல்திறன் குறிக்காட்டிகளின் அடிப்படையில் சேவை வழங்குநர்/ ஏஜென்சி/ ஒப்பந்தம் மூலம் நிலையான செயல்பாடு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தெருவிளக்கு பாராமரிப்புக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME.3) துறை அரசாணை (Ms) எண்.111 நாள்.17.08.2022 மற்றும் குடிநீர் பராமரிப்புக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME.3) துறை அரசாணை (Ms) எண்.112 நாள்.17.08.2022 ன் படி செயல்படுத்த மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME.3) துறை அரசாணை (Ms) எண்.111 நாள்.17.08.2022 மற்றும் குடிநீர் பாராமரிப்புக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME.3) துறை அரசாணை (Ms) எண்.112 நாள்.17.08.2022 மன்றம் அங்கீகரிக்கலாம்.

**24)** ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு 1 முதல் 18 வார்டுகளில் மொத்தம் 260 எண்ணிக்கையிலான சிறுமின்விசை பம்புகள் உள்ளன. மேற்காணும் சிறுமின்விசை மோட்டார் பம்புகள் பழுதுகள் ஏற்பட்டால் உடனுக்குடன் சரிசெய்வதற்கு இருப்பில் மின்மோட்டார்கள் இல்லை. எனவே, புதியதாக பதிலி மின்மோட்டார்கள் மற்றும் ஸ்டாட்டர்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022–2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**25)** தமிழ்நாடு அரசு, பொதுபணி துறையின் 2022 2023ஆம் ஆண்டு விலைவிகிதப் பட்டியல் பொதுப்பணித்துறை, தலைமை பொறியாளர்(பொது), சென்னை 5 அவர்களின் செயல்முறைகள் எண்.HOD(A)/18064/2021–1 நாள்.17.09.2021ல் கட்டுமான பணிகள் விலை விகிதம்(Building Meterials Data) மற்றும் மின்சார பணிகள் மேற்கொள்ள விலை விகிதம்(Electrical Meterials Data) 2022 2023ஆம் ஆண்டிற்கு மதிப்பீடுகள் தயார் செய்ய (GST மற்றும் இதர வரியினங்கள் நீங்கலாக) வரப்பெற்ற விலையினை 19.07.2022 முதல் நடைமுறை படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. பொதுப்பணித்துறையின் Standerd Schedule of Rate ஐ மன்றம் பதிவு செய்யலாம்.
2. கட்டுமான பணிகள் விலைவிகிதம் மற்றும் மின்சார பணிகள் மேறகொள்ள விலைவிகிதம் 19.07.2022 முதல் நடைமுறைபடுத்தியதை மன்றம் அங்கீகரிக்காலாம்.

**26)** ஜோலார்பேட்டை நகராட்சியில் தமிழக அரசின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் அரசின் ஓராண்டு சாதனையினை மற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருப்பத்தூர் புதிய மாவட்ட ஆட்சியரகம் திறப்பு விழாவிற்கு வருகை புரிந்ததற்கு செய்திதாள் விளம்பரம் மேற்கொள்ளப்பட்டு விளம்பர கட்டணத்தினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | செய்திதாளின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினமலர் நாளிதழ் DINAMALAR | **9,425/–** |
| 2 | தினமலர் நாளிதழ் DINAMALAR | **14.288/–** |

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மன்றம் அனுமதி வழங்கலாம். விளம்பரக் கட்டணத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.96 /2016/இ1

**27)** ஜோலார்பேட்டை நகராட்சியில் தமிழக அரசின் மூலம் கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் அரசின் ஓராண்டு சாதனையினை செய்திதாள் விளம்பரம் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர், திருப்பத்தூர் அவர்களின் செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் விளம்பரம் செய்யப்பட்டு அதற்குண்டான கட்டண தொகை ரூ. **25,200/-** செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம். விளம்பரக் கட்டணத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விளம்பர கட்டண தொகை ரூ. **25.200/** யினை தினமணி நாளிதழ் Express Publications (Madurai) Private Limited நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.96 /2016/இ1

**28)** ஜோலார்பேட்டை நகராட்சியின் அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தின் அமைந்துள்ள மின் இணைப்பில் உள்ள MRT barbox உயர் மின் அழுத்தம் காரணமாக பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி பழுதடைந்த MRT barboxல் உள்ள உதிரிபாகங்களை புதியதாக மாற்றி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தோராய செலவினத் தொகை ரூ.46,000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண்.3018 /2022 /இ1

**29)** ஜோலார்பேட்டை நகராட்சி பகுதிகளில் மொத்தம் 1604 தெருவிளக்குகள் உள்ளது. பொதுமக்கள் அளிக்கும் புகார்களின் பேரில் நடவடிக்கை மேறகொண்டு பழுதுநீக்கம் செய்ய மின்பணியாளர்களுக்கு தேவையான அலுமினியத்தாலான ட்ராலியுடன் கூடிய ஏணி ஒன்று வாங்குவதற்கு தேவையான செலவினத் தொகை ரூ.75,000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022-2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**30)** ஜோலார்பேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் **2021-2022**ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் பொட்டிகான் பள்ளம் பகுதியில் புதியதாக நவின எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் கட்டுமான பணிகள்

நடைபெறும் பகுதியில் ஆபத்து விளைவிக்கும் வகையில் மின்கம்பம் ஒன்று உள்ளது– இதனை மாற்றி அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம், ஜோலார்பேட்டை பிரிவிற்கு கடிதம் அனுப்பப்பட்டது. பதிவு கட்டணம் (Registration charges) தொகை **ரூ.1,180/–** மற்றும் மின்கம்பத்தை மாற்றி அமைக்க கேட்பு தொகையாக **ரூ.39,660/–** மொத்த தொகை **ரூ.40,840/–** செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்/
2. பணியின் அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று . பதிவு கட்டணம் (Registration charges) தொகை **ரூ.1,180/–** மற்றும் மின்கம்பத்தை மாற்றி அமைக்க கேட்பு தொகையாக **ரூ.39,660/–** மொத்த தொகை **ரூ.40,840/** செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2022–2023ஆம் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

<u>ந.க.எண்.833/2021 /இ1</u>

**31)** ஜோலார்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.1 பொட்டிகான்பள்ளம் பகுதியில் உள்ள உரக்கிடங்கில் பையோ மைனிங் (Bio mining) சுத்தம் செய்யப்பட்ட பகுதியில் 139 மரங்கள் நடும் பணியினை செய்ய 15வது மத்திய நிதிகுழு மான்யம் **2022–2023** ஆம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் ரூ.0.40 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 13.09.2022 அன்று குறுகிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | ஜோலார்பேட்டை நகராட்சி பொட்டிகான் பள்ளம் உரக்கிடங்கில் பையோ மைனிங் (Bio mining) செய்யப்பட்ட இடத்தில் 139 மரங்கள் நடும் பணி செய்தல். | 0.40 | திரு.S.B.குமரவேல், 0.11 % மதிப்பீட்டை விடகுறைவு |
| | | | திருமதி.M.மாலதி , 0.92 % மதிப்பீட்டை விடஅதிகம். |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பணியின் அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**32)** ஜோலார்பேட்டை நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.27828/2021/LA2 நாள்.29.03.2022. 15வது மத்திய நிதி குழு மான்யம் (Un–tied Grant) 2021 2022ஆம் அண்டிற்கு ரூ.35,65,816/ ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளது. அதன்படி கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|

| எ ண். | | தொகை ரூ.(இலட்சம்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.04 பார்சம்பேட்டை நியு காலனி ஆதிதிராவிடர் காலனி பகுதியில் புதியதாக மழைநீர் கால்வாய் மற்றும் சிறு பாலம் கட்டுதல் பணிகள் மேற்கொள்ளுதல். | 29.00 |
| 2. | வார்டு எண்.11 சக்கரகுப்பம் காலனி பகுதியில் சிறுபாலம் மற்றும் பக்க கால்வாய் கட்டும் பணிகள் மேற்கொள்ளுதல். | 1.75 |
| 3. | வார்டு எண்.03 குழந்தை ஏசு பள்ளியின் பின்புறம் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 2.70 |
| 4. | வார்டு எண்.18 சுப்பிரமணி கவுண்டர் தெருவில் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 2.20 |

**அலுவலக குறிப்பு**.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தினை 15வது மத்திய நிதி குழு மான்யம் (Un-tied Grant) 2021 2022ஆம் அண்டிற்கான நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்.

நகரமன்ற தலைவர்

நாள்.26.09.2022. ஜோலார்பேட்டை நகராட்சி

**ஜோலார்பேட்டை நகராட்சி**

**சாதாரண கூட்டம்**

2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29.09.2022ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 10.30 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலக நகரமன்ற கூடத்தில் நடத்தப்பட்ட சாதாரண தீர்மானங்கள்.

| வ. எண் | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 118 | மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 119 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 120 | பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 121 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 122 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | 6 | 123 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 124 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 125 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | 9 | 126 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | 10 | 127 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 128 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 129 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 13 | 13 | 130 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 14 | 14 | 131 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 15 | 15 | 132 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 16 | 16 | 133 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 17 | 17 | 134 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 18 | 18 | 135 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 19 | 19 | 136 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 20 | 20 | 137 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 21 | 21 | 138 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 22 | 22 | 139 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 23 | 23 | 140 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 24 | 24 | 141 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 25 | 25 | 142 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 26 | 26 | 143 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 27 | 27 | 144 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 28 | 28 | 145 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 29 | 29 | 146 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 30 | 30 | 147 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 31 | 31 | 148 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 32 | 32 | 149 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

(ஓம்) மா.காவியா
நகரமன்ற தலைவர்
ஜோலார்பேட்டை நகராட்சி

**/உண்மை நகல்/**

நகராட்சி ஆணையாளர்
ஜோலார்பேட்டை நகராட்சி